
# நால்வர் நான்மணி மாலை




ஒன்ராறியோ

இந்து சமயப் பேரவை

கனடா

உ

# நால்வர் நான்மணி மாலை

சைவதுரந்தரர்
கவிநாயகர்
வி. கந்தவனம்

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
1473 பேச்மவுண்ட் வீதி
ஸ்காபரோ, ஒன்ராறியோ
கனடா

நூல்: நால்வர் நான்மணி மாலை

ஆசிரியர்: வி. கந்தவனம்

முதற் பதிப்பு: செப்டம்பர் 2012

வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா

வடிவமைப்பு: திரு. மா. கனகசபாபதி

அச்சுப்பதிப்பு: விவேகா அச்சகம்

Title: Naalvar Naanmani Malai

Author: V. Kandavanam

First Edition: September 2012

Published by: The Hindu Religious Society
of Ontario

Designed: by: M. Kanagasabapathy

Printed by: Viveka Printers

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பேராசிரியர், முனைவர்
# வே. ச. அனந்தநாராயணன்
## வழங்கிய
# அணிந்துரை

சைவசமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவம் என்னும் அணிகலனில் மின்னிப் பொலியும் நான்கு மணிகளெனத் திகழ்பவர் ஆவர். இப்பெரியோர்கள் அணிவதற்கென, சைவதுரந்தரர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் நான்கு வகைத் தமிழ்ப் பாவின மணிகளைக் கோத்து ஒரு அழகிய மாலையை உருவாக்கியுள்ளார்.

சைவமணிகளைப் போற்றியமைத்துள்ள இந்த அற்புதமான **'நால்வர் நான்மணி மாலை'** என்னும் அணிகலனின் சிறப்பைக் கூற அணிந்துரை என்னும் ஒன்றை எழுத முயல்வது வெல்லப் பிள்ளையாரிட மிருந்து எடுத்த வெல்லத்தை அவருக்கே நிவேதனம் செய்வது போல ஆகும். எனினும், தமது நூலுக்கு அணிந்துரை ஒன்றை எழுதித் தருமாறு கவிஞர் கந்தவனம் நண்பர் என்ற உரிமையோடு என்னைக் கேட்டுக் கொண்டபோது அதை என்னால் மறுக்க இயலவில்லை. அதற்கு முக்கியமான காரணம் அவரது 'நால்வர் நான்மணி மாலை' யைப் படிக்கையில் என்னுள் எழுந்த மகிழ்ச்சியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எனது ஆவலே ஆகும்.

தமிழ் யாப்பிலக்கியத்தில், நான்மணி மாலை என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகை மணிகளைக் கொண்டு ஒரு மாலையை உருவாக்குவதுபோல், வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைச் செய்யுள் இனங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நாற்பது பாடல்களைக் கொண்டது நான்மணி மாலை.

மாந்தர் அணியும் மாலையில் ஒரு மணிக்குப் பின் அடுத்த வகை மணி தொடர்ந்து வருமாறு கோப்பது போல, நான்மணி மாலையில் ஒரு பாடலின் இறுதியில் வரும் சொல் அல்லது சொற்கள் அடுத்த பாடலின் முதலில் வருமாறு அந்தாதி முறையில் அமைக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பாவினங்கள் தத்தமக்குரிய யாப்பிலக்கண வரைமுறைகளைக் கொண்டவை. எனவே, நான்மணி மாலை படைபப்வர் இச்செய்யுள் வகைகளில் நல்ல தேர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும்.

வெண்பாக்களால் அமைந்த 'விநாயக வெண்பா' விருத்தப்பா வகையில் அமைந்த 'நல்லூர் நாற்பது', நால்வகைப் பாவினங்களும் பயிலும் 'தங்கம்மா நான்மணி மாலை' என்பன போலப் பலவகையான கவிதை நூல்கள் கவிநாயகரான கந்தவனத்தின் புலமைக்குக் கட்டியங் கூறுவன. அவரது கவித்திறனுக்கு மேலுமொரு சான்றாக விளங்குவது இப்போது நம் கைகளில் தவழும் 'நால்வர் நான்மணிமாலை'.

யாப்பின் அமைப்பு மட்டுமன்றி, இந்நூலின் மேலதிகமான சிறப்பு அதனுள் ஊடுருவி நிற்கும் பக்திச் சுவை ஆகும். இறைவனிடம் அளவிலாக் காதல் கொண்ட அடியார்களுக்குள் சிறந்த அடியார்களான சமயக் குரவர் நால்வரைப் பற்றிச் சைவதுரந்தரர் என்னும் விருது பெற்றவர் இயற்றியுள்ள நூலில் மிகுதியாகப் பக்தி ரசம் ததும்புவதில் அதிசயம் இல்லைதான்.

'நால்வர் நான்மணிமாலை' என்ற தலைப்பில் சைவப் பெருமகனாரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முன்னம் ஒரு நூல் இயற்றியுள்ளார். தலைப்பிலும் யாப்பின் அமைப்பிலும் அந்நூலைப் போல இருந்தாலும், கவிஞர் கந்தவனத்தின் நூலீல் உள்ள பாடல்கள் சொல்லாட்சியிலும் நடையிலும் எளிமையாக இருப்தோடு, பல புதிய கருத்துகள் கொண்டனவாகவும் உள்ளன. இதை விளக்கும் பல எடுத்துக்காட்டுகளில் சிலவற்றை இப்போது பார்ப்போம்.

தமிழ்க் கடவுளான முருகனே திருஞானசம்பந்தராக அவதாரம் எடுத்தான் என்ற செய்தியைத் திருப்புகழ் உட்படப்

பல இடங்களில் நாம் பார்த்ததுண்டு. இந்த நான்மணி மாலையில், சம்பந்தரும் முருகனும் முறையே, சைவசமயக் குருவாகவும், சிவனாருக்குக் குருவாகவும் இருந்ததையும், அவர்கள் இருவரும் உமையம்மையின் முலைப்பாலைப் பருகியவராக இருப்பதையும் குறிப்பிட்டு, ஆளுடைப் பிள்ளையாரிடம், 'உமக்கும் முருகனுக்கும் உள்ள உறவு எத்தகையது?' என்று நகைச்சுவை ததும்பக் கேட்கிறார் கந்தனைத் தம் பெயரில் கொண்ட கவிஞர் (பாடல் 9).

அதுபோலப் பாடல் 13இல் பாலறாவாயாரை நோக்கி, 'உமக்குப் பாலுண்ணத் தந்தது யாரென்று உம் தந்தை கேட்கையில் பார்வதியார் என்று சொல்வதை விடுத்துத் தோடுடைய செவியன் என்று சிவபெருமானை ஏன் சுட்டினீர் என்று விளங்கவில்லை? உலகத்தோர் அனைவருக்கும் உள்ள இந்த சந்தேகத்தைத் தீர்ப்பீரா?' என நிந்தாஸ்துதியாக வினவுகிறார் கந்தவனம்.

மேலுமுள்ள பாடல்களில், சிவனருளால் திருமுலைப்பால், பொற்றாளம், பொற்குடை, பொற்கிழி, படிக்காசு, பல்லக்கு என்று அடுக்கடுக்காகப் பல சீர்களைப் பெற்றதற்குக் காரணம் அவ்விறைவன் அவருக்கு நற்றமிழில் பாடுதற்குப் புரிந்த அருளே காரணம் என்பார். முன்னம் பரஞ்சோதி முனிவர் சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றிய விந்தைச் செயல்களுக்குக் காரணம் 'தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்' என்று வினவியதை இது நினைவுறுத்துகிறது. இறுதிப் பகுதியில் காணும் பாடலொன்றில் (எண் 37), சொல்லொணாச் சிறப்பு வாய்ந்த சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்களின் உட்பொருளை உணர்ந்தோரின் சம்பந்தம் ஒன்றே கொள்ளத்தக்க தொடர்பாகும் என்று நயம்படக் கூறியிருக்கிறார் கவிஞர்.

அடுத்து, திருநாவுக்கரசரைப் பற்றிப் பாடும் பத்துக் கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் ஒன்றில் (பாடல் 6), ஞானசம்பந்தர் சைவத்தைப் பரப்புவதற்காகச் சிவனார் அளித் பல்லக்கு, குடை போன்ற வசதிகளோடு நடை மேற்கொண்டது போலல்லாமல், அப்பர் பெருமான் தம் திருப்பதங்கள் தேயத்

தேயக் கைலாயம் உட்படப் பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனைக் கண்டு உள்ளுருகப் பாடியதைச் சுட்டி அவருடைய தமிழ்ப் பாடல்கள் நமக்கு உயிர்த்துணையாக அமையும் என்று மிக்க நெகிழ்ச்சியுடன் கவிஞர் கூறுகின்றார்.

சமண மதத்தவர் தமக்கு ஆற்றிய கொடுஞ் செயல்களைத் தாங்கிக் கொண்டு, வாதத்தில் அவரைத் தோற்கடித்துச் சைவத்தை நிலைநாட்டிய நாவுக்கரசருக்கு உறுதுணையாக இருந்தவை அவரது 'பொன்னையும் மண்ணையும் ஒன்றாக நோக்கிய பூமனமும்', நல்லவர், தீயவர் என்ற பாகுபாடில்லாமல் அன்பு செலுத்தும் தன்மையும் சிவன் மேல் உள்ள காதலுமே ஆகும் என்று அப்பரின் சிறப்புகளைப் பலவாறாகக் கூறி (பாடல்கள் 22, 38), கவிஞர் கந்தவனம் அவரது இனிய கண்ணோட்டத்தை நமக்குப் புலப்படுத்துகிறார்.

எப்பொழுதும் அரனையே நினைத்துத் துன்பங்களைத் தாங்கும் நெஞ்சம், பணிவு என்னும் பண்பிற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து சம்பந்தரின் பல்லக்கைத் தாங்கி தோள், உழவாரப் படை கைக்கொண்டு ஆலயங்களைச் சீர்செய்த கை, கயிலாயத்திற்கே நடந்து சென்ற கால் என்று அப்பரின் மனத்தையும் அவயவங்களையும் சித்திரிக்கும் பாடல் 30-இல் அப்பரின் உயர்வை மட்டுமன்றிக் கவிநாயகரின் புலமைத் திறத்தையும் காண்கிறோம்.

சிவபெருமானின் அடிமையாக அவரால் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் பின்னர் அப்பெருமானைத் தம் உற்ற தோழனாகவும், தாம் பணித்தபடி செய்யும் தூதுவனாகவும் உரிமை கொண்டாடிச் சிவனடியார்களுள் ஒரு தனி இடத்தைப் பெற்றிருப்பதைச் சுவைபடக் கூறும் பத்து அழகிய ஆசிரிய விருத்தங்களை இந்த நால்வர்மணிமாலையில் காண்கிறோம்.

மேலும், அவ்வாறு நெருங்கிய பற்றுக் கொண்ட ஈசன், தமது கண்பார்வையை இழக்கச் செய்ததைத் தாம் செய்த பிழைக்கு ஏற்ற தண்டனை என்று சுந்தரமூர்த்தி நாயனார் ஏற்றுக் கொண்டது சைவநீதியின் தன்மையை விளக்கும்

அருஞ்செயலென்று நம் கவிஞர் கூறுவது (பாடல் 7) மிக அருமை.

இன்னொரு இடத்தில் (பாடல் 19), பிள்ளைகள் தம் பெற்றோர் இட்ட பெயருக்கு நம்பியாரூரர் போலப் பெருமை சேர்க்க வேண்டுமென்று கூறி, இக்காலத்துப் பிள்ளைகள் தமக்கிட்ட பெயரைத் தம் இஷ்டத்திற்குச் சுருக்கியும் மாற்றியும் அமைத்துக் கொள்வதைப் புலவர் நாசூக்காகக் கண்டிக்கிறார்.

அகவல்

இதுபோல, 27ஆம் பாடலில் ஆரூரர் தமக்கேற்பட்ட இன்னல்களைச் சமாளித்து இன்புற வாழ்ந்த விதம் நம் போன்றோர்க்குத் தன்னம்பிக்கையை ஊட்டுவது எனக் குறிக்கிறார்.

வெண்பா

நான்மணிமாலையின் இறுதிப்பகுதியில் சுந்தரரை வாழ்த்திப்

கட்டளைக் கலித்துறை

[illegible]அவர் இறைவனைத் தம் தோழனாகக் கொண்டது மட்டுமன்றி, தாம் இட்ட ஏவலையும் செய்ய வைத்தது உறுதியான பக்தியின் வலிமையை நமக்கு உணர்த்துகிறது எனக் கவிஞர் சுட்டிக் காண்பிக்கின்றார்.

விருத்தம்

படிப்போர் நெஞ்சை உருக்கும் திருவாசகம் படைத்த மாணிக்க வாசகப் பெருமானின் பெருமையை நமக்கு எடுத்துரைக்கும் பத்தி ஆசிரியப்பாடல்களில், கவிஞரின் பக்தி

அகவல்

உணர்வின் உச்சத்தையும் அதன் அடிப்படையில் இறைவனையே தட்டிக் கேட்கும் உரிமை கொண்டாடலையும் காண்கிறோம்.

வெண்பா

மேலை நாட்டுப் பரிகளை வாங்கப் பாண்டிய மன்னன் தந்த பணத்தைத் திருப்பெருந்துறையில் சிவபெருமானுக்குக்

கட்டளைக் கலித்துறை

கோயில் கட்டுவதற்காகச் செலவழித்ததால் வாதவூரரை அம்மன்னன் தண்டித்தது நம் கவிஞருக்குப் பொறுக்கவில்லை. ‘தவறு செய்தது நீரா அல்லது உம்மை ஆட்டுவித்த சிவனா என்று எமக்குச் சொல்வீர்’ என்று மணிவாசகரை வினவுகிறார்

விருத்தம்

[illegible] (பாடல் 12). அவர் கேள்விக்கு ‘நன்றே செய்வீர் பிழை செய்வீர், நானோ அதற்கு நாயகமே?” என்ற திருவாசக வரிகளில் மணிவாசகர் விடை தந்துள்ளாரென நான் நம்புகிறேன்.

இன்னொரு பாடலில், மணிவாசகரைச் சிறையிலடைத்து வருத்துமாறு மன்னனைச் செய்வித்த இறைவன் பின்னர் தானே அம்மன்னனின் ஆணைப்படி மண்சுமந்து, அவனிடம் பிரம்படியும் பெற்றதைக் குறிப்பிட்டு, முதலில் அடியார் துன்புறுமாறு செய்ததும் பின் தானே துன்புற்றதுமாக ஒரு கூத்தை எதற்காகச் செய்கிறாய் என்று கவிஞர் அரனை நோக்கிக் கேட்பது மிகவும் சமத்காரமான வஞ்சப் புகழ்ச்சியாகிறது.

மற்ற மூன்று சமயக் குரவர் காலத்தைத் தெளிவாக வரையறுத்துள்ள அறிஞர்கள் மணிவாசகர் வாழ்ந்த காலத்தைப் பற்றி இன்னும் வாதம் செய்து கொண்டிருப்பதால் நிலவும் குழப்பத்தை 32-ஆம் பாடலில் குறிப்பிட்டுத் தம் ஆற்றாமையை நூலாசிரியர் வெளிப்படுத்து கிறார். இதனினும் மேலாக, "தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்கும் திருவாசகத் தேனெனும் மருந்தை', நமக்களித்த மாணிக்கவாசகரைத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி தொகுத்த சிவனடியார்கள் பட்டியில் சேர்த்துக் கணக்கிடாதது நம் கவிநாயகரை மிகவும் வருத்துவதைப் பார்க்கிறோம். இது பற்றிய தம் வருத்தத்தை நால்வர் நான்மணி மாலையின் இறதிப்பாடலில் வெளிப்படையாகக் கூறிச் சைவத்தமிழ்ப் பெருமக்கள் வாதவூரரை அறுபத்து நான்காம் நாயன்மாரெனவே கருதுவர் என்று முடிக்கிறார் சைவதுரந்தரர் என்னும் விருதைத்தாங்கும் கவிநாயகர் கந்தவனம்.

'நால்வர் நான்மணி மாலை' என்னும் இந்த அருமையான படைப்பைப் பற்றி என் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்புக் கொடுத் என் நண்பருக்கு என் மனம் கனிந்த நன்றியைக் கீழ்க்காணும் பாடல்கள் வழியே தெரிவிக்கலாம் என எண்ணுகிறேன்:

வெண்பா:

செந்தமிழ்த் தேன்பிலிற்றும் செய்யுள் மலர்செறிந்த
இந்தப்பா மாலைப் கிணையுண்டோ? - அந்தமிகு
சைவக் குரவர் சிறப்பெல்லாம் செப்பளங்கள்
சைவ துரந்தரர்க்(கு)ஆர் நேர்?

ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பா:

வேலை விடம்கழுத்தில் மிளிரவிடை ஊர்பவனின்
மேனி தனில்பாதி மேவிநிற்கும் உமையளித்த
பாலைப் பருகிநின்ற பாலகர்வாய் மொழிந்ததமிழ்ப்
பாக்க ளுள்நிறைந்த பத்திச் சுவையினையும்
சூலை நோய்தீரச் சொல்லெடுத்துச் சிவனாரைத்
துதித்த நாவரசின் தூயபணிச் சிறப்பும்மண
மாலை அணிதருணம் வாதிட்டாட் கொண்டசிவன்
வாகைப் பாக்களிலே வடித்தவரின் மாண்பினையும்
மேலைப்பரிநரியாய் மாற்றிவைத்த பெருமானின்
மேன்மை புகலு(ம்)மணி வாசகரின் வண்மையையும்
ஆலைக் கரும்பினிப்பாய் அழகுமணி மாலையிதில்
அள்ளித் தரும்கவிஞர்க்(கு) அணிவேனோர் புகழ்மாலை!

------- வே. ச. அனந்தநாராயணன்

# பதிப்புரை

பௌத்த சமய ஆதிக்கங்களால் எமது சைவசமயம் நலிவுற்று சீர்குலைந்து இருந்த வேளையில் எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளால் சமயகுரவர்கள் பிறப்பெடுத்து சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். சைவசமயம் வாழ்க்கைச் சமயம் என நிரூபித்தனர். சைவ நெறிதான் மக்களின் வாழ்க்கை நெறியென தங்கள் தோத்திரப் பாடல்கள் மூலம் ஆலயங்களுக்கு பாதயாத்திரையாகச் சென்ற எடுத்தியம்பினர்.

சமயக்குரவர்களால் பாடப்பட்ட தேவார திருவாசகங்களை சொற்கோயில் என்று சான்றோர் பகருவர். இன்னும் தேவார திருவாசகங்களைப் பாடி ஆத்மா ஈடேற்றம் அடைபவர்கள் பல ஆயிரம் மக்கள்.

அருள் வாசகங்களாகிய தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளை எமது இந்து சமயப்பேரவைத் திருக்கூட்டத்தினர் கடந்த 13 வருடங்களாகக் கனடாவில் முற்றோதி வருகின்றனர். இந்நூலாசிரியர் சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம் ஐயா தலைமையில் திருமுறைப் பூர்த்தி விழாக்களையும் பிற சமய விழாக்களையும் பேரவை நடத்தி வருகிறது.

தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு, பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள், என்ற இரு திருமுறைத்தொகுப்பு நூல் களையும் பேரவை வெளியிட்டுள்ளது. இவ்விரு நூல்களையும் தொகுத்தவர் இந்நூல் ஆசிரியர் அவர்களேயாவார்.

இந்நூலாசிரியர் நாடறிந்த கவிஞர், கவிநாயகர், திருவருட்கவிஞர் என்ற பட்டங்களைப் பெற்றவர். பல கவிதை நூல்களை இயற்றிய பெருமைக்கு உரியவர். தற்பொழுது பல சிற்றிலக்கியங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்நூலாசிரியர் எழுதிய சைவசமயம் சார்ந்த நூல்கள் யாவற்றுக்கும் மணிமகுடம் வைத்தாற்போல நால்வர்மணிமாலை என்ற நூல் அமைந்துள்ளது. இந்நூல் வெண்பா, கட்டளைக்

கலித்துறை விருத்தம், அகவல் என்ற ஒழுங்கில் ஆக்கப்பட்டுள்ளது. நாற்பது பாடல்களைக் கொண்ட இந்நூலில் வெண்பாவில் திருஞானசம்பந்தரும் கட்டளைக் கலித்துறையில் அப்பரும் விருத்தத்தில் சுந்தரரும், அகவலில் மாணிக்கவாசகரும் போற்றிப் பாடப்பட்டுள்ளனர்.

இனிய தமிழில் பக்திச் சுவை ததும்ப படிப்போர்கள் திரும்பத் திரும்பப் படிக்கத்தூண்டும் வகையில் பாடப்பட்டுள்ளது.

நால்வர்மணிமாலை என்ற இந்தச் சிறந்த நூலுக்கு விளக்க உரை போன்ற உன்னதமான அணிந்துரையை கற்றிந்த அறிஞர் சைவப் பெரியார் முனைவர் அனந்தநாராயணன் அவர்கள் எழுதி யிருக்கின்றார்.

அணிந்தரையின் இறுதியில் கவிநாயகருக்கு அவர் சூட்டியுள்ள புகழ்மாலையே நூலுக்கு மெருகூட்டு கின்றது. பெரியார் அவர்களுக்கு பேரவையின் சார்பில் என்நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை வடிவமைப்புச் செய்த மா. கனகசபாபதி அவர்களுக்கும் அச்சிட்ட விவேகா அச்சகத்தினருக்கும் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சைவம் வாழ்ந்தால் தமிழ் மொழிவளரும். தமிழ் மொழி வாழ்ந்தால் சைவம் வாழும்!

சிவ. முத்துலிங்கம்
நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்
செயலாளர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை



உ

# நால்வர் நான்மணி மாலை

## கடவுள் வணக்கம்

வேல்முருகன் முன்னுதித்த விநாயக வேளே
நால்வருக்கு யானியற்றும் நான்மணி மாலை
பால்கரும்பு மோதகம்முப் பழச்சுவை போலே
சால்புறநின் தண்ணருளைத் தந்தருள் வாயே.

## நூல்
## வெண்பா

தமிழ்ஞான சம்பந்த சற்குருவே நின்றன்
அமுதான தேவார மான - சமுத்திரத்தில்
தோய்ந்ததால் தொற்றித் தொடர்ந்த வினையாவும்
மாய்ந்தமைக் கென்னோகைம் மாறு. (1)

## கட்டளைக் கலித்துறை

மாறாத நோய்களும் மாறி யுடல்நல வாழ்வுபெறும்
ஆறாத வைம்புல வேடரும் ஆறி அடங்கநெஞ்சில்
ஊறாத அன்பும்வந் தூறுமுன் தேவாரம் ஓதுகையில்
சூறாவ ளித்தொண்டில் தோய்ந்த திருநாவுத் தூயவரே. (2)

## விருத்தம்

தூயவர் உள்ளத் தாலே
சுந்தரர் தோற்றத் தாலே
வாயதன் வலிமை யாலே
வன்றொண்டர் என்னும் நாமம்
நேயவர் வழங்கப் பெற்று
நித்தமும் அவரின் தோழர்
ஆயவர் சொற்ற மிழ்நம்
அழுக்குகள் கழுவும் ஊற்றே. (3)

## அகவல்

ஊற்றா யமுதை உடையவன் தன்னை
ஆற்றா தெண்ணி அழுதே அனுபவ
வாசகம் தந்த வாதவூர் ஐயவுன்
வாசகந் தானுமோர் வற்றா ஊற்றே
ஊற்றினில் இவ்விதம் உருக்கம் ஊறுமோ
ஆற்றினில் இவ்விதம் அன்பு பாயுமோ
அழுவதில் இவ்வித ஆனந்தம் உண்டோ
தொழுவதில் தூங்காத் துணிவுமொன் றுண்டோ
ஐயா உனையளந் தறிய
மெய்யாய் மேலும் வேண்டும்பல் பிறப்பே! (4)

## வெண்பா

பிறப்பதனிற் சைவப் பிறப்பொன்றே மேலாம்
பிறப்பென்னும் உண்மை பிறங்க - சிறப்புறவே
வையத்திற் சைவம் வளர வழிசெய்தார்
தெய்வச்சேய் காழியர்கோன் தேர். (5)

## கட்டளைக் கலித்துறை

தேரில்லை பல்லக்கு மில்லை திருவடி தேயத்தேய
ஊருள்ள கோயில்கள் உள்ளி நடந்துளம் ஊறவன்பால்
நேரினில் கண்டிறை வன்தனை நீர்வர நெக்குருகி
ஆர்வுறப் பாடிய அப்பர் தமிழ்துணை ஆருயிர்க்கே. (6)

## விருத்தம்

உயிரினும் சிறந்த தோழர்
　　உதவியை நாடி வந்த
துயர்களைத் துடைத்து வாழ்ந்த
　　சுந்தரர் தாமும் செய்த
உயர்வுறு வாக்கை மீறி
　　உரியதண் டனையைப் பெற்ற
நியதியை நினைக்கச் சைவ
　　நீதியும் விளங்கு மாமே. (7)

### அகவல்

விளங்கா தவர்க்கு விளங்கா இறைவன்
விளங்கும் குருவாய் வீற்றிருந் தருள
களங்கமில் லாத கண்ணீர்ப் பத்தியில்
உளங்கரைந் தூறித் தேறித் தெளிந்தே
பாட வேண்டும் போற்றிப் பரமனைப்
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும் என்றே அம்பலத்
தாடும் ஐயனைப் பாடப் பாடப்
பிறந்த தாமோ பெரும
சிறந்த திருவா சகச்செந் தேனே. (8)

### வெண்பா

தேனார் மொழியார் திருமுலைப்பால் உண்டதமிழ்க்
கோனே சமயக் குருமணியே - ஞானத்
திருவுருவே சீர்காழி செய்ததவப் பேறே
முருகனுக்கு நீயென் முறை. (9)

### கட்டளைக் கலித்துறை

முறையான தாண்டவ மூர்த்தியின் கீர்த்தியை முன்பிருந்தே
அறியாதார் யாருளர் ஆயினும் அப்பூதி யாரேயன்பால்
நிறைவாகக் கண்டவர் பேரினில் நேர்ந்துதண் ணீர்ப்பந்தலை
நிறுவித்தா கந்தீர்த்த தொண்டு நிகரற்ற நெஞ்சணியே.
(10)

### விருத்தம்

அணிந்தவர் அழகா யாடை
அறிந்தவர் சிவனார் அன்பு
பணிந்தவர் புகழைப் பாடி
பரவினார் பத்தி யாலே
மணந்ததம் பரவை ஊடல்
மாதவர் தூதி னாலே
தணிந்திடச் செய்த தோழர்
தாளிணை போற்று வாமே. (11)

## அகவல்

போற்றி ஞான நெறியதன் போக்கை
மாற்றி யமைத்த வாதவூ ரைய
மந்திரி என்று மன்னவன் நம்பிச்
சுந்தரப் பரிகள் சோதித்து வாங்கத்
தந்தசெல் வத்தைத் தவறான வழியில்
சிந்தைசெய் யாது செலவுநீ செய்தாய்
என்னுமோர் குற்றச் சாட்டையுன் மீது
மன்னவன் சுமத்தித் தண்டனை வழங்கினன்
உண்மையைச் சொல்வாய் உத்தம
அண்ணலா நீயா செய்தவர் யாரே. (12)

## வெண்பா

யார்தந்தார் பாலென்றே தந்தை அதட்டிடவும்
பார்வதியார் பாலூட்டப் பார்த்திருந்தும் - சீர்காழிப்
பேரானைச் சுட்டியதேன் பிள்ளையரே தீர்த்தருளும்
பாராரின் ஐயம் பரிந்து. (13)

## கட்டளைக் கலித்துறை

பரிந்து திலக வதியாரும் வேண்டப் பரமனருள்
சுரந்துறு சூலைநோய் தோற்றுவித் தப்பரைத் தொல்சமயம்
பரந்தெழ மீண்டும் அழைத்தனர் பல்லவன் பார்த்தவரை
விரைந்தழைத் தின்னல் விளைத்துண்மை கண்டடி
வீழ்ந்தனனே. (14)

## விருத்தம்

வீழ்ந்திலர் வழக்கில் தோற்றும்
வெறுத்திலர் தடுத்தாண் டாலும்
தாழ்ந்திலர் சத்தி யத்தில்
தவறித்தம் கண்போ னாலும்
ஆழ்ந்தநற் பத்தி யாலே
அற்புதச் சத்தி பெற்று
வாழ்ந்தவன் தொண்டர் வாழ்க்கை
வளர்ச்சிக்குப் பாட மாமே. (15)

## அகவல்

பாடறிந் தொழுகுதல் பத்திக்கு நன்றா
வீடிருந் தொழுகுதல் வீட்டினைத் தருமா
சிற்றின்பம் இன்றிப் பேரின்பம் சேருமா
பற்றற் றவனைப் பற்றுதல் பாசமா
புலன்களை அடக்குதல் புத்தியா பத்தியா
மலங்களை நீக்குதல் வாழ்க்கைக்கு நல்லதா
சித்தம் தெளியும் திருவா சகத்தில்
எத்தனை வினாவோ அத்தனை வகைக்கும்
விடைகள் வாதவூர் அடிகாள்
கடல்முத் தெனவே கிடைக்கின் றனவே. (16)

## வெண்பா

கிடைக்கும் திருமுலைப்பால் கேடில்பொற் றாளம்
கிடைக்கும் குடையும் கிழியும் - படிக்காசும்
பல்லக்கும் பாலறா வாயற்குப் பாடுதற்குச்
சொல்லும் சுரக்கும் தொடர்ந்து. (17)

## கட்டளைக் கலித்துறை

தொடர்ந்து சமண்செய்த சூழ்ச்சிகள் திட்டங்கள் தோற்றதனால்
படர்ந்திடச் சைவமும் பல்லவன் கோயில் பலவற்றினை
இடமெங்கும் கட்டி விழாக்கள் இயற்றிட ஏமுறவே
நடந்தது நாடெங்கும் நாவுக் கரசர்தம் நற்பெயரே. (18)

## விருத்தம்

பெயரினைப் பெற்றோர் எண்ணிப்
பெருமையால் வைப்பர் வைத்த
பெயரினைச் சுருக்கல் மாற்றல்
பிள்ளைகட் கழகு மில்லை
பெயரினுக் கேற்ப வாழ்ந்த
நம்பியா ரூரர் பெற்ற
உயர்வினை உணர்ந்து பார்க்கின்
உருகுமாம் உள்ளம் ஐயா. (19)

## அகவல்

ஐயா மாணிக்க வாசக அன்பால்
மையார் மடந்தை மெய்யோர் பாகரைப்
பாடிப் பரவியும் ஆடிக் கசிந்தும்
கூடிக் குலவியும் குருந்த மரநிழல்
கண்டும் வாசகம் கருத்துடன் கேட்டும்
கொண்டு சென்ற பொருள்களைக் கொடுத்தும்
முருகியற் குதிரைகள் ஆவணி மூலத்தில்
வருமென வாய்மலர்ந் தருளியும் பரிகளை
வராமற் செய்தே வருத்திய
பராபரர் காட்டிய பண்பென்ன பண்பே! (20)

## வெண்பா

பண்புக்கும் பத்திக்கும் பாலம் அமைத்தவொரு
நண்பகலோ நன்மணியோ நாயகரோ - பெண்பனையாய்
ஆண்பனையை மாற்றி அமணர் அரன்நீற்றின்
மாண்பதனைக் காணவைத்த மன். (21)

## கட்டளைக் கலித்துறை

மன்மதன் மாயத்தை நெற்றிக்கண் மாயத்தால் மாற்றியவர்
தன்னருள் பெற்றுச் சரியைத்தொண் டாற்றிய தாண்டவக்கோன்
பொன்னையும் மண்ணையும் ஒன்றாக நோக்கிய பூமனத்தார்
இன்னலத் தாள்களை என்தலை வைத்தென்றும் ஏத்துவனே.
(22)

## விருத்தம்

ஏத்துவார் அன்பை ஏத்தும்
ஏழைபங் காளர் தாள்கள்
ஏத்தியே இருவ ரோடில்
லறம்மகிழ்ந் தியற்றி னாரை
மாத்தவ ஆரூ ராரை
மாசிலாத் தோழர் தம்மை
ஏத்துவேன் யானும் ஏத்தி
இடர்களைப் போக்கு வேனே. (23)

## அகவல்

போக்கும் வரவும் இல்லாப் புனிதரின்
வாக்கினை நம்பி வாதவூ ராரே
நம்பிய மன்னனின் நம்பிக்கை இழந்தீர்
வெம்பிச் சிறையில் வேதனைப் பட்டீர்
துன்பங் கண்டும் ஆண்டவர் தூங்கினர்
பின்பு வைகையைப் பெருக்கினர் செம்மனச்
செல்வியின் பிட்டுக்குச் சேவையும் செய்தனர்
சொல்லிய பணியைத் தொடராது தானே
வாதை அடியும் வாங்கினர்
ஏதுக் கையா இத்தனை கூத்தே! (24)

## வெண்பா

கூத்தன் திருவருளாற் கூர்ஞானப் பிள்ளையவர்
யாத்த திருப்பாடல் அத்தனையும் - பூத்த
புதுமலர்போல் இன்றும் பொலிந்துமணம் வீசிக்
கதியளிக்கும் அற்புதத்தைக் காண். (25)

## கட்டளைக் கலித்துறை

காண்பதும் கேட்பதும் கற்பதும் நிற்பதும் காதலினால்
மாண்புறு நாவேந்தர் வாய்மொழி வாழ்த்திவ ணங்கியன்பால்
பூண்பது புண்ணிய நீறெனின் போற்றியப் பூவுலகில்
வீண்பகை வேற்றுமை வில்லங்கம் வீழ்வுறும் வேதனையே.(26)

## விருத்தம்

வேதனை வந்த போதும்
வேணியர் விரும்பி யாண்டு
சோதனை செய்த போதும்
சுந்தரர் சோர்ந்தி டாது
வாதமே புரிந்து வாழ்வை
மகிழ்வுடன் அனுப வித்த
சாதனை தன்னம் பிக்கை
தந்தெமை வளர்க்கு மாமே. (27)

## அகவல்

வளர்த்துயர் நம்பிக்கை மாதொரு பாகர்
உளத்தினுட் புகுந்த உயிர்மணி வாசக
ஆண்டுகொண் டருளிய ஆண்டவர் உமக்குப்
பாண்டியன் மகிழும் பாங்கினிற் குதிரைகள்
வருமெனச் சொல்லியும் வராமற் செய்த
பரிகளும் கடைசியில் வந்தன பாண்டியன்
கருணைகொண்(டு) உமது கண்ணியம் அறிந்தே
உரியநல் மதிப்பினை உவந்துசெய் வேளை
பரிகளும் நரிகளாய் மாறி
துரிசுகள் செய்த சூக்குமம் என்னே! (28)

## வெண்பா

என்னே மழவன் மகள்நோய் இடர்தீர்த்த
தென்னே குளிர்நோய் இதமான(து) - தென்னே
மறைந்த வணிகன் மறுவாழ்வு பெற்ற(து)
இறந்தபெண் மீண்டதென் னே. (29)

## கட்டளைக் கலித்துறை

என்னென்ன சோதனை என்னே துயர்களை ஏற்றநெஞ்சம்
தன்னேரில் சம்பந்தர் பல்லக்கைச் சால்புடன் தாங்கியதோள்
பன்னுயர் கோயில்கள் பாடிப் பரவிப் பணிசெய்தகை
மன்னும் கயிலாயம் காண நடந்தகால் மாட்சியென்னே. (30)

## விருத்தம்

என்னரும் சமய யோக
ஏந்தலே வாழி தொண்டர்
மன்னுயர் வாழ்வைச் சொன்ன
வள்ளலே வாழி தோழர்
மன்னரை ஏவல் செய்ய
வைத்தவா வாழி இந்தச்
சின்னவன் நினது கோலம்
சிந்தைசெய் துயர்வான் வாழி. (31)

## அகவல்

வாழி எம்மான் மாணிக்க வாசக
காழி யர்கோன் அப்பரின் காலம்
தோழர் வரலா றவற்றைத் துருவி
ஆழ ஆய்ந்தவர் அறுதி யிட்டனர்
எனினும் நின்றன் வாழ்க்கையில் ஏனோ
புனைவுகள் அதிகம் புதிர்களும் அதிகம்
ஆவியைப் பிழியும் அருமணி வாசக
மூவர் முதலியர் முன்னோ பின்னோ
யாதுன் காலம் ஐயனே
பேதை தெளிவு பெறும்வழி உண்டோ? (32)

## வெண்பா

உண்டு திருமுலைப்பால் ஒப்பில்லா ஞானத்தைக்
கொண்டவருட் பிள்ளையரே கோமகள்தான் - கண்டுன்னைப்
பாலன் எனநினைக்கப் பாண்டியன்நோய் தீர்த்தீரே
ஆலவா யானருளா லே. (33)

## கட்டளைக் கலித்துறை

அருள்பெற்ற நாவர சையரே ஆண்டவர் ஆடல்கண்டு
மருளுற்ற இந்தப் பிறப்பு வருத்தும் வலிமறந்து
வரதரின் ஆடலின் மாண்பில் மகிழுமிவ் வாழ்வையெண்ணி
பெருமைகொள் நின்றனின் பெற்றியை யானென்ன பேசுவதே.
(34)

## விருத்தம்

பேசருந் தொண்டர் மேன்மை
பேசவைத் தெங்கள் வாழ்வின்
மாசுகள் களைந்த வள்ளல்
வையகம் வந்து முன்னர்
ஆசைவைத் தவர்க்கு வாழ்வை
அளித்தநல் லழகர் தோழர்
ஈசருக் கவரை எண்ணி
இல்லறம் இயற்று வேனே. (35)

## அகவல்

இயற்ற லின்றி இறைவன் அருளால்
இயற்கை யாகவே ஊறிய இன்ப
வாசகந் தன்னை வையகத் தார்க்கு
வழங்கிய வாதவூர் மாணிக்க வாசக
பாவை பாடிய பக்குவப் பாங்கதும்
கோவை பாடிய கொள்கையும் மற்றவர்
ஆடல்கள் பாடிய அழகையும் ஆய்கையில்
மாதொரு பாகர் மீதினில் வைத்த
காதலைத் தெளிவுறக் காட்டத்
தீதிற் பெண்களே சிறப்பெனத் தெரியுதே. (36)

## வெண்பா

தெரியாத வற்றைத் தெரியுமெனச் சொல்வார்
அரிதான வற்றை அறியார் - திருஞான
சம்பந்தர் தேவாரச் சாரம் அறிவார்தம்
சம்பந்தம் கொள்ளல் தகும். (37)

## கட்டளைக் கலித்துறை

தகவிலர் தக்கவர் நல்லவர் தீயவர் தன்மைகளை
அகமதிற் கொள்ளாத அப்பர்தம் பக்குவம் யாரறிவார்.
பகையதும் நட்பதும் அற்ற பரமனைப் பத்திசெய்யும்
சுகமதில் தோய்ந்தவர் தொண்டைத் தொடர்பவர் தூயவரே.
(38)

## விருத்தம்

தூயவன் தொண்டர் போற்றி
சுந்தரத் தோற்றம் போற்றி
தாயினும் சிறந்த மேன்மைத்
தம்பிரான் தோழர் போற்றி
ஏயர்கோன் சேர மானார்
இணையிலா நண்பர் போற்றி
தோயவே வையம் தொண்டத்
தொகைதந்தார் போற்றி போற்றி. (39)

## அகவல்

போற்றி வாசக மழையே போற்றி
போற்றி தென்னவன் புகழே போற்றி
பொய்யடி மையிலாப் புலவன் என்றே
துய்யடி யாலே சுந்தரர் சொல்லியும்
நம்பி யாண்டார் நம்பிகள் ஏனோ
நம்பி வேறோர் பொருளினை நாட்டி
தூய தொண்டத் தொகையில் நீக்கினர்
ஆயினும் அறுபத்து நான்காம் அடியவர்
என்றே நின்னை ஏத்தி
நன்றே வணங்குவர் நானிலத் தமிழரே. (40)

நால்வர் நான்மணி மாலை
முற்றும்.

# 2012இல் கவிநாயகர் படைத்த சிற்றிலக்கியங்கள்

1. நாவலர் பெருமான் நான்மணி மாலை
2. சிவநெறிச் சிந்தனைகள்
3. நால்வர் நான்மணி மாலை
4. நற்பொருள் நாற்பது
5. புதுவாழ்வுப் பூவண்டு
6. முன்னறி தெய்வம்
7. சிவயோக சுவாமிகள் திருவெண்பா
8. விபுலாநந்தர் வெண்பா
9. நமசிவாய வெண்பா
10. இளையப்ப வெண்பா
11. வித்தியானந்த வெண்பா
12. பண்டிதமணி வெண்பா
13. பொன்னைய வெண்பா
14. செபரத்தின வெண்பா
15. விசுவலிங்க வெண்பா
16. திருமூலர் திருவெண்பா